


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 151 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 25 – வியாழக்கிழமை 09 ஜனவரி 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 151 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 25 - Thursday 09 January 2025 - Kovai ★★ 12 Pages ₹5.00






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2025) சென்னை, தேனாம்பேட்டை, காமராஜர் அரங்கில் இந்திய முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோரது படத்திறப்பு – புகழ் அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம், காங்கிரஸ் கட்சியின் தமிழக பொறுப்பாளர் டாக்டர் அஜோய் குமார், செயலாளர் சூரஜ் ஹெக்டே, சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜேஷ்குமார், தோழமைக் கட்சியின் தலைவர்கள் வைகோ, தொல். திருமாவளவன், சண்முகம், முத்தரசன், காதர்மொகிதீன், அப்துல் சமது, கொங்கு ஈஸ்வரன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தலைவர் கலைஞரிடம் நெருங்கிப் பழகியவர்! தமிழ்நாட்டுக்கு எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்தவர்!

# டாக்டர் மன்மோகன் சிங் உலகப் பொருளாதார மாமேதை!

## படத்திறப்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஜன. 9 -**

**சென்னை காமராஜர் அரங்கில் நேற்று முன்தினம் டாக்டர் மன்மோகன் சிங், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோரின் படங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது முதல்வர் அவர்கள், “டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் உலகப் பொருளாதார மாமேதை” என்றும், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள், “மனதில் உள்ளதை மறைக்காமல் துணிச்சலாகப் பேசக் கூடியவர்” என்றும் புகழாரம் சூட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2025) சென்னை, காமராஜர் அரங்கில் இந்திய முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோரது படத்திறப்பு புகழஞ்சலி நிகழ்ச்சியில் ஆற்றிய உரை வருமாறு:-

முன்னாள் பாரதப் பிரதமரும், நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுடைய திருவுருவப்படத்தையும், முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய பெருமதிப்பிற்குரிய ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சியும் அவர்களுக்கு புகழ் அஞ்சலி செலுத்தக் கூடிய இந்த நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பேற்றுள்ள உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு அகில இந்திய அளவில் மாபெரும் தூணாக இருந்தவர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு மிகப்பெரிய தூணாக விளங்கிக் கொண்டிருந்தவர் நம்முடைய மதிப்பிற்குரிய ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள். இரண்டு முக்கியமான தலைவர்களை அடுத்தடுத்து நாம் இழந்திருக்கிறோம். இருவருடைய இழப்பும் பெரிய இழப்பாகும். நாட்டுக்காக மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் இருவரையும் அறிந்தவன் என்ற முறையில் எனக்கும் இது தனிப்பட்ட இழப்புதான்!

**அரசியல் வானில் வலம் வந்தவர் இளங்கோவன்!**

டாக்டர் மன்மோகன் சிங் அவர்களைப் பொருத்தவரையில் அவர் பிறவி அரசியல்வாதி அல்ல. ஆனால், இளங்கோவன் அவர்கள் பாரம்பரியமிக்க ஒரு அரசியல் குடும்பத்தைச்சார்ந்தவர் என்பது அனைவருக்கும் தெரியும். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பேரனாக, சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத் அவர்களுடைய மகனாக! இப்படி ஒரு அரசியல் குடும்பத்தில் பிறந்து இறுதி வரை அரசியல் வானில் வலம் வந்தவர்.

இன்னும் சொல்லவேண்டும் என்றால், டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் அமைச்சரவையில், அமைச்சராகவும் இடம் பெற்றிருந்தவர் நம்முடைய ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள். ஜவுளித்துறை அமைச்சராக பொறுப்பேற்று பணியாற்றியவர். இருபெருந்தலைவர்களை நாம் இன்றைக்கு இழந்திருக்கிறோம். டாக்டர் மன்மோகன் சிங் அவர்களைப் பொறுத்தவரை இந்திய அளவில் மட்டுமல்லாமல், உலகப் பொருளாதார மேதைகளில் ஒருவராக மதிக்கப்பட்டவர். அவர் நினைத்திருந்தால், எந்தக் கவலைகளும் இல்லாத பரபரப்பு இல்லாத

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### அடாவடி ஆளுநரைக் கண்டித்து

# தமிழ்நாடெங்கும் தி.மு.க. மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## லட்சக்கணக்கில் கழகத்தினர் திரண்டனர்!

**சென்னை, ஜன. 9 -**

**தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப் படுத்தி வரும் ஆளுநரைக் கண்டித்து மாநிலம் முழுவதும் தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆளுநரை காப்பாற்றும் அ.தி.மு.க. பா.ஜ.க. கள்ளக் கூட்டணிக்கும் ஆர்ப்பாட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.**

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாட்டில் மாவட்ட தலைநகரங்களில் 7.1.2025 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்தது. அதன்படி, நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு தமிழ்நாடு முழுவதும் ஆளுநரை கண்டித்து தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆளுநர் பதவி விலக வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். சென்னை சைதாப்பேட்டையில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கனிமொழி என்.வி.என். சோமு, கிரிராஜன் இணை அமைப்புச் செயலாளர்கள் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தாயகம் கவி மற்றும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக கண்டன முழக்கம் எழுப்பினர். ஆளுநரைக் காப்பாற்றும் அ.தி.மு.க. பா.ஜ.க. கள்ளக் கூட்டணிக்கும் ஆர்ப்பாட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய தி.மு.க. நிர்வாகிகள் தேசியகீதத்தையும், சட்டமன்ற மரபுகளையும் அவமதித்தவர் ஆளுநர் ஆர்.என்.ரவி என்று கண்டனம் தெரிவித்தனர். வரலாற்றை ஆளுநர் புரிந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினர்.



கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் சைதையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தயாநிதி மாறன் எம்.பி., துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், தாயகம் கவி, மாவட்டச் செயலாளர்கள் மயிலை த.வேலு, நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், இரா.கிரிராஜன், கனிமொழி என்.வி.என்.சோமு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.